கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 5ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.29/2022
----

கார்த்திகேயன் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

குமாரம்மாள் ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக இம்மனுவானது 05.11.2025ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முத்துராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.P.S.இளங்கோவேல்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/ பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 14 வரையிலான ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கு கோப்பில் சேர்க்க அனுமதிக்க வேண்டி கட்டளை 8 விதி 1(A) மற்றும் பிரிவு 151 CPCன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு கோப்பில் சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்கள் என்றும், எனவே மனுதாரர்/பிரதிவாதியின் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்/பிரதிவாதி தனது மனுவில், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எனவே அசல் வழக்கு கோப்பில் மேற்படி ஆவணத்தை சேர்ப்பது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள், 7 முதல் 10 வரையிலான ஆவணங்கள் மற்றும் 14 ஆவணங்கள் அசல் ஆவணங்களாகவும், 6, 11, 12, 13 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் ஒளிப்பட நகலாகவும் உள்ளது. மேற்படி மனுதாரர் மனுவில் கூறியுள்ள ஆவணங்களின் அசலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற காரணமோ, விளக்கமோ மனுதாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 6, 11, 12, 13 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் ஒளிநகல் ஆவணமாக உள்ள நிலையில்,

ஒளிநகல் ஆவணத்தை கோப்பிற்கு எடுக்க இயலாது என்ற நிலையிலும், இம்மனுவானது பகுதியாக அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/பிரதிவாதியின் இம்மனுவானது 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள், 7 முதல் 10 வரையிலான ஆவணங்கள் மற்றும் 14 ஆவணங்களை பொறுத்து அனுமதித்தும், 6, 11, 12, 13 ஆகிய ஆவணங்களை பொறுத்து தள்ளுபடி செய்தும் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.05 17:43:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.05 17:43:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.29/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 05.11.2025